வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர் : மலர்விழி

தேதி 17.04.2025 நேரம் மாலை 6.10 மணி

---

தலைப்புச் செய்திகள்

யமுனை நதியின் தூய்மை நிலவரங்களை மேம்படுத்துவது குறித்து, பிரதமர் திரு. நரேந்திர மோடி இன்று விரிவான முறையில் மறு ஆய்வுக் கூட்டம் நடத்தினார்.

இந்தியாவின் பாதுகாப்புத் துறை, சுயசார்புப் பாதையில் வேகமாக பயணித்து வருவதாக, பாதுகாப்பு அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் கூறியுள்ளார்.

இந்தியாவின் ஸ்மார்ட் ஃபோன் ஏற்றுமதி, கடந்த நிதியாண்டில், 2 லட்சம் கோடி ரூபாய் என்னும் சாதனை அளவை எட்டி உள்ளது.

தமிழ்நாடு மற்றும் புதுச்சேரி மண்டல கடற்படை அதிகாரி ரியர் அட்மிரல் சதீஷ் ஷெனாய், இன்று புதுச்சேரியில், முதலமைச்சர் திரு. ரங்கசாமியை, மரியாதை நிமித்தம் சந்தித்து பேசினார்.

---

மோடி-யமுனா (4)

யமுனை நதியின் தூய்மை நிலவரங்கள், மற்றும், அதை மேம்படுத்துவதற்கான எதிர்கால திட்டங்கள் குறித்து, பிரதமர் திரு. நரேந்திர மோடி இன்று விரிவான முறையில் மறு ஆய்வுக் கூட்டம் நடத்தினார். இதுகுறித்த கூடுதல் விவரங்கள்...

(வாய்ஸ்)

*மோடி-யமுனா 1 (11)*

(வாய்ஸ்)

யமுனை நதியின் தூய்மைப் பணி குறித்த பல்வேறு ஏஜென்சிகளின் செயல் திட்டங்கள், இக்கூட்டத்தில் ஏஜென்சி வாரியாக மறு ஆய்வு செய்யப் பட்டன. நதியில் சேரும் கழிவு நீரை, அந்தந்த இடத்தில் வைத்தே நிகழ் நேரத்தில் அளவிடவும், கழிவுநீர் சுத்திகரிப்பு ஆலைகளின் செயல்பாடுகளை கண்காணிக்கவும், நவீன தொழில் நுட்பங்களை பயன்படுத்த வேண்டும் என பிரதமர் அறிவுறுத்தினார். டெல்லி நகர நிர்வாகம், நகர்ப்புற நதி மேலாண்மைத் திட்டம் ஒன்றை தயாரித்து, மாஸ்டர் பிளான் திட்டத்துடன் ஒருங்கிணைக்க வேண்டும் என இக்கூட்டடத்தில் முடிவு செய்யப்பட்டது. மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா, ஜல் சக்தி அமைச்சர் திரு. சி.ஆர் பாட்டீல், டெல்லி முதலமைச்சர திருமதி ரேகா குப்தா மற்றும் மூத்த அதிகாரிகள் இதில் கலந்து கொண்டனர்.

---------------------------

*மோடி-சந்திரசேகர் (5)*

முன்னாள் பிரதமர் சந்திரசேகர் பிறந்த நாளான இன்று, பிரதமர் திரு. நரேந்திர மோடி அன்னாருக்கு புகழாரம் சூட்டி உள்ளார். அரசியலில் தேசிய நலனை முன்னிலைப் படுத்தியவர் சந்திரசேகர் என்றும், சமூக நல்லிணக்கம், மற்றும், தேசக் கட்டுமானத்தில் அன்னாரின் முயற்சிகள், எந்நாளும் நினைவில் கொள்ளப்படும் என்றும், சமூக ஊடகப் பதிவில் பிரதமர் கூறியுள்ளார்.

---------------------------

*ராஜ்நாத் (12)*

இந்தியாவின் பாதுகாப்புத் துறை, சுயசார்புப் பாதையில் வேகமாக பயணித்து வருவதாகவும், பாதுகாப்புத் துறை ஏற்றுமதிக்கான நாட்டின் உள் வலிமை, உலக அளவில் தொடர்ந்து வலுவாகி வருவதாகவும், பாதுகாப்பு அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் கூறியுள்ளார். பாதுகாப்புத் துறையே எதிர்கால சக்தி என்ற தலைப்பில், புதுடெல்லியில் இன்று

நடைபெற்ற மாநாட்டின் தொடக்க அமர்வில் உரையாற்றிய அவர், பாதுகாப்புத் துறையில், நாட்டின் திறன்களை உயர்த்துவதே அரசின் பிரதான நோக்கம் என்றும் கூறினார். பாதுகாப்புத் துறையில், சுயசார்பை எட்டவும், பாதுகாப்புப் படைகளை நவீன மயமாக்கவும் அரசு முக்கிய கவனம் செலுத்தி வருவதாக அவர் தெரிவித்தார். பாதுகாப்புத் துறையில் நடப்பு 2025ஆம் ஆண்டு, சீர்திருத்தங்களின் ஆண்டாக அறிவிக்கப் பட்டுள்ளதாகவும் திரு. ராஜ்நாத் சிங் கூறினார்.

---------------------------

*சிஆர்பிஎஃப் 1 (17)*

அடுத்த ஆண்டு மார்ச் 31ஆம் தேதிக்குள், நாட்டில் நக்சல்வாதம் முற்றிலுமாக ஒழிக்கப்படும் என்றும், மத்திய ரிசர்வ் போலீஸ் படை வீரர்கள், இதில் முக்கிய பங்காற்றுவார்கள் என்றும், மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா கூறியுள்ளார். மத்திய பிரதேஷ் மாநிலம் நீமச் நகரில் இன்று நடைபெற்ற, 86ஆவது சிஆர்பிஎப் நிறுவன நாள் விழாவில் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

இந்தியாவின் கோப்ரா பெட்டாலியன் படையினர், நக்சல்வாதத்தில் இருந்து நாட்டை விடுவிக்க, முன் எப்போதும் இல்லாத அளவில், நடவடிக்கை மேற்கொண்டு வருவதாகவும், இவர்களின் அபாரத் துணிச்சலால், நக்சல்வாதம் இல்லாத நாடாக மேம்படுவதற்கான இந்தியாவின் மனஉறுதி, நிச்சயமாக நிறைவேறும் என்றும், அவர் தெரிவித்தார்.

நாட்டிற்காக உயிர்நீத்த சிஆர்பிஎப் ஊழியர்களுக்கு, உள்துறை அமைச்சர் தமது உரையில் அஞ்சலி செலுத்தினார். வலுவான-வளமான நாடாக இந்தியா மேம்பட்டு வருவதற்கு, இவர்களின் தியாகமே காரணம் என்றும், பாதுகாப்புப் படையினர் மற்றும் அவர்தம் குடும்பத்தினரின் நலன்களை பாதுகாக்க, அரசு, பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து இருப்பதாகவும், அவர் தெரிவித்தார்.

---------------------------

வக்ஃபு நீதிமன்றம் (14)

வக்ஃபு திருத்த சட்டத்தின் அரசியல் சாசன செல்லுபடித் தன்மையை ஆட்சேபித்து தாக்கல் செய்யப்பட்ட மனுக்கள் மீது, இன்று உச்சநீதிமன்றத்தில், மீண்டும் விசாரணை நடைபெற்றது. இந்த சட்டம் குறித்து நீதிமன்றம் எழுப்பி உள்ள கேள்விகளுக்கான பதிலை, மத்திய அரசு 7 நாட்களுக்குள் சமர்ப்பிக்கும் என்று, தலைமை வழக்கறிஞர், விவாரணைகளின் போது நீதிமன்றத்தில் தெரிவித்தார். வக்ஃபு சட்டத்தின் 9, மற்றும், 14ஆவது பிரிவின் கீழ், மத்திய-மாநில வக்ஃபு வாரியங்களில், நியமனங்கள் எதுவும் மேற்கொள்ளப்பட மாட்டாது என்றும் அவர் உறுதி அளித்தார். அரசு அறிவிக்கை மூலம் வக்ஃபு சொத்தாக அறிவிக்கப்பட்ட சொத்துக்கள் உட்பட, வக்ஃபு சொத்துக்கள் எதுவும், அடுத்தகட்ட விசாரணை வரை, வக்ஃபு அல்லாத சொத்துக்களாக மறு அறிவிக்கை செய்யப்பட மாட்டாது என்றும், அவர் கூறினார். இந்த வழக்கை, தலைமை நீதிபதி திரு. சஞ்சீவ் கன்னா தலைமையில், நீதிபதிகள் திரு. சஞ்சய் குமார், திரு. கே.வி விஸ்வநாதன் ஆகியோர் அடங்கிய, 3 நீதிபதிகள் அமர்வு, விசாரித்து வருகிறது.

--------------------------

தன்கர் நீதிமன்றம் (17)

நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட மசோதாக்களுக்கு ஒப்புதல் அளிப்பதில், குடியரசுத் தலைவர் முடிவெடுக்க காலக்கெடு இருக்க வேண்டும் என, அண்மையில் உச்சநீதிமன்றம் வெளியிட்ட தீர்ப்பு குறித்து, குடியரசுத் துணைத் தலைவர் திரு. ஜெக்தீப் தன்கர் கவலை வெளியிட்டுள்ளார். இன்று புதுடெல்லியில் உள்ள குடியரசுத் துணைத் தலைவர் மாளிகையில், மக்களவைப் பயிற்சி மாணவர்களிடையே உரையாற்றிய அவர், நீதிபதிகள் சூப்பர் நாடாளுமன்றம் போல் செயல்பட்டு, சட்டமியற்றும் பணிகளையும், நிர்வாகப் பணிகளையும், தாங்களே மேற்கொள்ளும் ஒரு ஜனநாயகத்தை இந்தியா கேட்கவில்லை என்றார். சட்டமியற்றும் அமைப்புகளும், நீதித் துறை மற்றும் நிர்வாகத் துறையும் ஒருங்கிணைந்து செயல்படுவது ஜனநாயகம் என்றும், நீதித் துறை, நிர்வாகப் பணிகளை கையில் எடுக்க ஆரம்பித்து விட்டால்,

தேர்தலின் போது யாரை கேள்வி கேட்பது என்பதே மக்களுக்கு தெரியாமல் போகும் என்றும் அவர் கூறினார். டெல்லி உயர்நீதிமன்ற நீதிபதி ஒருவரின் வீட்டில் ரொக்கப் பணம் பிடிப்பட்டு ஒருமாதம் ஆகிவிட்ட நிலையில், நிலைமைகளை தூய்மையாக்கும் வகையில், இனியாவது உண்மைகள் வெளிவர வேண்டும் என, திரு. ஜெக்தீப் தன்கர் மேலும் குறிப்பிட்டார்.

--------------------------

*ஸ்மார்ட் ஃபோன்* (14)

இந்தியாவின் ஸ்மார்ட் ஃபோன் ஏற்றுமதி, கடந்த நிதியாண்டில், 2 லட்சம் கோடி ரூபாய் என்னும் சாதனை அளவை எட்டி உள்ளது. கடந்த நிதியாண்டின் முதல் 10 மாதங்களில், இந்தியாவில் இருந்து அதிக அளவில் ஏற்றுமதி செய்யப்படும் பொருளாகவும் ஸ்மார்ட் ஃபோன்கள் மேம்பட்டுள்ளதாக மத்திய தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் திரு. அஷ்வினி வைஷ்ணவ், சமூக ஊடகப் பதிவு ஒன்றில் தெரிவித்துள்ளார். 2013-14ஆம் ஆண்டில், இந்தியாவின் ஏற்றுமதி பட்டியலில், 167ஆவது இடத்தில் இருந்த ஸ்மார்ட் ஃபோன் ஏற்றுமதி, தற்போது முதலாவது இடத்திற்கு உயர்ந்து இருப்பதாக, அவர் தெரிவித்துள்ளார். ஸ்மார்ட் ஃபோன் உற்பத்தியாளர்களுக்கு, 2020ஆம் ஆண்டு மத்திய அரசால் தொடக்கப்பட்ட, உற்பத்தியுடன் இணைந்த ஊக்குவிப்புத் திட்டமே, இத்துறையின் வளர்ச்சிக்கு முக்கிய உந்து சக்தியாக திகழ்வதாகவும், இத்துறையில் குறிப்பாக பெண்கள் உட்பட இளைய சமுதாயத்தினருக்கு லட்சக் கணக்கில் புதிய வேலை வாய்ப்புகள் உருவாகி இருப்பதாகவும் அமைச்சர் கூறியுள்ளார்.

--------------------------

*நீட் பயிற்சி 1* (5)

நியாயமற்ற வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபட்டதற்காக, கடந்த 3 ஆண்டுகளில், பல்வேறு நீட் பயிற்சி மையங்களுக்கு, 49 நோட்டீஸ்கள், மத்திய நுகர்வோர் பாதுகாப்பு ஆணையத்தால் அனுப்பப் பட்டுள்ளன. 24

பயிற்சி மையங்கள் மீது, 75 லட்சம் ரூபாய்க்கு மேல் அபராதமும் விதிக்கப் பட்டுள்ளது. இதுகுறித்து கூடுதல் விவரங்கள்.....

(வாய்ஸ்)

*நீட் பயிற்சி 2* (8)

(வாய்ஸ்)

போட்டித் தேர்வுகளுக்கான பயிற்சித் துறையில், நுகர்வோர் பாதுகாப்பு சட்ட விதிமுறைகளை முற்றிலுமாக பின்பற்றி நடக்குமாறு, பயிற்சி மையங்களுக்கு, நுகர்வோர் பாதுகாப்பு ஆணையம் அறிவுறுத்தி உள்ளது. மாணவர்களுக்காக பயிற்சி மையங்களால் வெளியிடப்படும் விளம்பரங்கள், எந்தவொரு தகவலையும் மறைக்காத வகையில், முற்றிலும் தெளிவாகவும், துல்லியமாகவும், பொய்த் தகவல் அற்றதாகவும், அமைய வேண்டும் என்றும், குறிப்பாக, போட்டித் தேர்வில் வெற்றிக்கு உத்தரவாதம் அளிப்பதை முற்றிலுமாக தவிர்க்க வேண்டும் என்றும், அறிவுறுத்தப் பட்டுள்ளது.

---------------------------

*ரங்கசாமி சந்திப்பு (10)*

தமிழ்நாடு மற்றும் புதுச்சேரி மண்டல கடற்படை அதிகாரி ரியர் அட்மிரல் சதீஷ் ஷெனாய், இன்று புதுச்சேரியில், முதலமைச்சர் திரு. ரங்கசாமியை, மரியாதை நிமித்தம் அவரது அலுவலகத்தில் சந்தித்து பேசினார். இந்திய கடற்படையில் இணைவது குறித்து மாணவர்களிடையே ஆர்வம் ஏற்படுத்தும் வகையில், பள்ளி-கல்லூரிகளில், விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை நடத்த, அவர் இந்த சந்திப்பின் போது, முதலமைச்சரிடம் அனுமதி கோரினார். புதுச்சேரி அரசால் ஏற்பாடு செய்யப்படும் கண்காட்சிகளில், கடற்படைக்கு தனி அரங்கு ஒதுக்கித் தரவும் அவர் கேட்டுக் கொண்டார். கடற்படை அதிகாரியின் கோரிக்கைகளை முதலமைச்சர் கேட்டறிந்து, உரிய ஏற்பாடு செய்வதாக உறுதி அளித்தார்.

---------------------------

*புனித வெள்ளி-ரங்கசாமி* (8)

மனித குலத்தை பாவங்களில் இருந்து மீட்பதற்காக, ஏசுபிரான் சிலுவையேறிய நாளான புனித வெள்ளியில், அன்பின் ஒளி, அனைவரின் வாழ்விலும் பிரகாசிக்கட்டும் என்றும், வாழ்க்கை மேலும் சிறக்கட்டும் என்றும், புதுச்சேரி முதலமைச்சர் திரு. ரங்கசாமி, நாளை புனித வெள்ளியை முன்னிட்டு, இன்று வெளியிட்டுள்ள செய்தியில் கூறியுள்ளார். ஏசுபிரானின் அளப்பரிய தியாகத்தை நினைவூட்டுவதே புனித வெள்ளி என்றும், புனிதமான இந்நாளில், கர்த்தரின் கரங்களில் ஆறுதல் அடைந்து, அவரின் தெய்வீக இருப்பை உணர்வோமாக என்றும், முதலமைச்சர் கூறியுள்ளார்.

---------------------------

*கைத்தறி* (7)

மத்திய ஜவுளி அமைச்சகத்தின் கீழ் செயல்படும் தேசிய கைத்தறி மேம்பாட்டுக் கழகம், டெல்லி அருகே நொய்டாவில், சிறப்பு கைத்தறி கண்காட்சி ஒன்றை தொடக்கி உள்ளது. 13 மாநிலங்களைச் சேர்ந்த, திறமையாக கைத்தறி நெசவாளர்கள், 25க்கும் மேற்பட்ட அரங்குகளில், பாரம்பரிய சிறப்புடன் கூடிய தங்களின் கைத்தறிப் படைப்புகளை காட்சி மற்றும் விற்பனைக்கு வைத்துள்ளனர். வரும் 24ஆம் தேதி வரை இக்கண்காட்சி நடைபெறும் என்றும் அறிவிக்கப் பட்டுள்ளது.

---------------------------

*புலிகள் பாதுகாப்பு* (13)

புலிகள் இனத்தை பாதுகாக்க கடந்த 2023ஆம் ஆண்டு, பிரதமர் திரு. நரேந்திர மோடியால் தொடக்கப்பட்ட, சர்வதேச பெரும் பூனைக் கூட்டணியின் தலைமையகத்தை புதுடெல்லியில் அமைக்க, இக்கூட்டணிக்கும், இந்தியாவிற்கும் இடையே உடன்பாடு எட்டப் பட்டுள்ளது. கீழை நாடுகளுக்கான வெளியுறவுச் செயலர் திரு. குமரன், சர்வதேச பெரும் பூனைக் கூட்டணியின் தலைமை இயக்குநர் டாக்டர் எஸ்.பி யாதவ் ஆகியோர், புதுடெல்லியில் இன்று இந்த ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டனர். கூட்டணியின் தலைமையகத்தை புதுடெல்லியில்

அமைத்து, அடுத்த 5 ஆண்டுகளுக்கான செலவுகளை சமாளிக்க ஏதுவாக, 150 கோடி ரூபாய் பட்ஜெட் ஆதரவு வழங்க, இந்தியா இந்த உடன்பாட்டில் ஒப்புக் கொண்டுள்ளது. சர்வதேச பெரும் பூனைக் கூட்டணியின் தலைமையக அதிகாரிகள், மற்றும், ஊழியர்களுக்கான விசா அனுமதி மற்றும் இதர உரிமைகள் குறித்த ஷரத்துகளும், உடன்பாட்டில் இடம்பெற்றுள்ளன.

---------------------------

*சுற்றுலா-மலேசியா* (13)

மலேசிய சுற்றுலா மற்றும் பயண ஏற்பாட்டாளர்கள் சங்கம் சார்பில், கோலாலம்பூரில் நாளை நடைபெற உள்ள கண்காட்சியில், வெளியுறவுத் துறை இணையமைச்சர் திரு. பபித்ரா மார்கரீட்டா, 15 உறுப்பினர் பிரதிநிதிக் குழு ஒன்றுடன் கலந்து கொள்கிறார். ஆசியான்- இந்தியா சுற்றுலாத் துறை வல்லுனர்களுக்கு இடையிலான பரிமாற்றத் திட்டத்தின் கீழ் ஏற்பாடு செய்யப் பட்டுள்ள இக்கண்காட்சியில், வடகிழக்கு மாநிலங்கள் உட்பட, ஒட்டுமொத்த இந்தியாவின் சுற்றுலா வாய்ப்புகள் குறித்து, முக்கிய கவனம் செலுத்தப் படுகிறது. அமைச்சர் இந்த 2 நாள் பயணத்தின் போது, மலேசியாவில் உள்ள இந்திய சமூகத்தினர் மற்றும் வர்த்தக தலைவர்களையும் சந்திக்க இருக்கிறார். கடந்த ஆண்டு நடைபெற்ற, 21ஆவது ஆசியான்-இந்தியா உச்சி மாநாட்டின் போது, நடப்பு 2025ஆம் ஆண்டு, ஆசியான்-இந்தியா சுற்றுலா ஆண்டாக அறிவிக்கப் பட்டதும் குறிப்பிடத்தக்கது.

---------------------------

*ஜல் சக்தி* (6)

கங்கை, காவிரி, கோதாவரி உட்பட பல்வேறு நதிகள் மற்றும் நன்னீர் ஆதாரங்களின் உயிரி பண்முகத் தன்மையை மேம்படுத்துவது குறித்த டிஜிட்டல் வசதிகளை, மத்திய ஜல்சக்தி அமைச்சர் திரு. சி.ஆர் பாட்டீல், புதுடெல்லியில் இன்று தொடக்கி வைத்தார். கங்கை நதியை தூய்மைப் படுத்துவதற்கான, தேசிய இயக்கத்தின் கீழ், இந்திய வன

விலங்குக் கழகம் மூலமாக மேற்கொள்ளப்படும் பல்வேறு திட்டப் பணிகளையும், அமைச்சர் மறு ஆய்வு செய்தார்.

---------------------------

*வாத்ரா (10)*

மூத்த காங்கிரஸ் தலைவர் திரு பிரியங்கா வாத்ராவின் கணவர் ராபர்ட் வாத்ரா-வுக்கு சொந்தமான நிறுவனம், அரியானா மாநிலம் குருகிராமில் நிலம் வாங்கியதில், பணச் சலவை நடந்திருப்பதாக கூறப்படும் வழக்கில், அமலாக்கப் பிரிவு அதிகாரிகள், புதுடெல்லியில் இன்று 3-ஆவது நாளாகவும், திரு வாத்ரா-விடம் நேரடி விசாரணை மேற்கொண்டனர். இதற்கிடையே, பிஜேபி செய்தி தொடர்பாளர் திரு. கவுரவ் பாட்டியா, இன்று புதுடெல்லியில் செய்தியாளர்களிடம் பேசுகையில், விசாரணைக்கு ஆளாகி உள்ள நில பேரத்தில், நான்கே மாதங்களில், 700 சதவிகித அளவிற்கு கொள்ளை லாபம் ஈட்டப் பட்டுள்ளதாகவும், ஊழல் பணத்தை அரசு முழுமையாக மீட்கும் என்றும் கூறினார்.

---------------------------

*மீண்டும் தலைப்புச் செய்திகள்*

யமுனை நதியின் தூய்மை நிலவரங்களை மேம்படுத்துவது குறித்து, பிரதமர் திரு. நரேந்திர மோடி இன்று விரிவான முறையில் மறு ஆய்வுக் கூட்டம் நடத்தினார்.

இந்தியாவின் பாதுகாப்புத் துறை, சுயசார்புப் பாதையில் வேகமாக பயணித்து வருவதாக, பாதுகாப்பு அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் கூறியுள்ளார்.

இந்தியாவின் ஸ்மார்ட் ஃபோன் ஏற்றுமதி, கடந்த நிதியாண்டில், 2 லட்சம் கோடி ரூபாய் என்னும் சாதனை அளவை எட்டி உள்ளது.

தமிழ்நாடு மற்றும் புதுச்சேரி மண்டல கடற்படை அதிகாரி ரியர் அட்மிரல் சதீஷ் ஷெனாய், இன்று புதுச்சேரியில், முதலமைச்சர் திரு. ரங்கசாமியை, மரியாதை நிமித்தம் சந்தித்து பேசினார்.

இத்துடன் இந்த செய்தி அறிக்கை நிறைவு பெறுகிறது